## தலைப்பு 13 – இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 14 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவிற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 16 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்படப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து, 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்வதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன் அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

  எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) இந்த அறிக்கையின் இலக்கம் 1.6.2(அ) கொண்ட பந்தியில் உள்ள அவதானிப்பு சம்பந்தமாக முன்னைய வருடத்திலே என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் மீளாய்வாண்டிலே நிதிக்கூற்றுக்களை சமர்ப்பிக்கும் போது சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கருத்துரை

### 1.6.1 நிதிச் செயலாற்றல் கூற்று

**மீண்டெழும் செலவினங்கள்**

நிதிக்கூற்றுக்களுக்கான மீண்டெழும் செலவினங்களை கணக்கிலிடும் போது கீழ்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சம்பளம், ஊதியம், ஏனைய ஊழியர்களுக்கான அனுகூலங்கள் செலவின பேரேட்டின் படி ரூபா 128,852,579 ஆக இருப்பினும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் ரூபா 128,184,523 ஆக காட்டப்பட்டிருந்தது. | இந்த முரண்பாட்டுக்கு காரணம் பிரயாணச் செலவு ஆவதுடன் அது ஏனைய மீண்டெழும் செலவுகளின் கீழ் காட்டப்பட்டுள்ளது. | பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ஆ) | ஏனைய பொருட்கள் மற்றும் சேவைகளின் செலவினம் செலவின பேரேட்டின் படி ரூபா 74,978,326 ஆக இருப்பினும் நிதிச் செயலாற்றுகை கூற்றில் ரூபா 75,646,381 ஆக காட்டப்பட்டிருந்தது. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | - மேற்படி - |

### 1.6.2 நிதி நிலைமைக் கூற்று

ஆதனப் பொறிகள் மற்றும் உபகரணங்கள் கணக்கிலிடும் போது கீழே குறிப்பிடப்பட்டுள்ள குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2004 ஆம் வருடத்திற்கு முன் கையேற்கப்பட்ட சொத்துக்கள் நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றில் உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். | சகல சொத்துக்களும் பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (ஆ) | வாகனங்களின் பெறுமானத்திற்கான திறைசேரி அச்சுக் குறிப்புக்கள் மற்றும் ஆணைக்குழுவின் வாகன ஆவணத்திற்கிடையே ரூபா 7,552,881 க்கான முரண்பாடு காணப்பட்டது. | வாகனங்களின் பெறுமானத்தினை சரியாக இனங்காண்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் அதன்படி எதிர்காலத்தில் சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | முரண்பாடுகளை இனங்கண்டு பிழையின்றி கணக்கிலிடப்பட வேண்டும். |
| (இ) | 2015 மற்றும் 2019 ஆம் வருடங்களில் அரச நிறுவனம் ஒன்றிற்கு கையக்கப்படுத்தப்பட்டிருந்த 02 வாகனங்களின் ரூபா 27,697,804 க்கான கிரயத்தினை நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றிலிருந்து நீக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். | கையளிக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதியினை நிதிசாரா சொத்துக்களுக்கான கூற்றிலிருந்து நீக்கப்படல் வேண்டும். |
| (ஈ) | சென்ற வருடம் கொள்வனவு செய்யப்பட்ட கிரயம் ரூபா 294,900 க்கான மோட்டார் சைக்கிளினை 2021 பெப்ரவரி 28 ஆந் திகதி வரையிலும் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்புடன் உடன்படுகின்றேன். எதிர்காலத்தில் சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | கொள்வனவு செய்யப்படும் சொத்துக்கள் மூலதனமாக்கப்படல் வேண்டும். |

## 2. செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய இலக்கம் 01/2014 கொண்ட அரச நிதி சுற்று நிருபத்தின் பிரகாரம் மீளாய்வு வருடத்திற்கான செயற்பாட்டு திட்டமொன்றினை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | அவதானத்தினை ஏற்றுக் கொள்கின்றேன். | சுற்றுநிருப ஏற்பாடுகளுக்கு அமைய செயற்பட வேண்டும். |

### 2.2 எதிர்பார்க்கப்பட்ட விளைவு மட்டத்தினை பெற்றுக்கொள்ளாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| சென்ற ஆண்டில் 4,266 முறைப்பாடுகள் உட்பட 2020 ஆண்டில் தீர்க்கப்பட வேண்டி இருந்த 10,550 மொத்த முறைப்பாடுகளில் 3,812 இனை சீராக்கப்பட்டு மீளாய்வு ஆண்டு இறுதியில் 6,738 மிகுதி இருந்தன. இவைகளில் 23 முறைப்பாடுகள் 10 வருடங்களுக்கு மேற்பட்டனவாகவும் 1,804 முறைப்பாடுகள் 3 வருடம் முதல் 10 வருடங்களுக்கு இடையில் கிடைத்தவைகளாகவும் இருந்தன. | பணிக்குழாம் பற்றாக்குறை மற்றும் கொவிட் 19 தொற்று காரணமாக கிடைக்கப் பெறும் முறைப்பாடு எண்ணிக்கையினை முடிப்பதற்கு இயலாது உள்ளது. மீதியுள்ள சகல முறைப்பாடுகளையும் தீர்த்து வைப்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கின்றது. | முறைப்பாடுகளை தீர்த்து வைப்பதற்கான துரித வேலைத் திட்டமொன்றினை தயாரிக்கப்படல் வேண்டும். |

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

| அவதானிப்புக்கள் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் இலக்கம் 770(4) கொண்ட நிதிப் பிரமாணம் | ஆணைக்குழுவின் 42 வாகனங்களுக்கான ஆய்வினை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அவதானிப்பினை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் இற்றைப்படுத்தலினை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வேன். | நிதிப்பிரமாணங்களுக்கு அமைய செயற்பட வேண்டும். |

## 2.4 வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 02/2020 இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 பந்தியின் படி மற்றும் 2018 இலக்கம் 19 கொண்ட தேசிய கணக்காய்வு சட்ட மூலத்தின் 16.2 பிரிவின் படி செயலாற்றுகை அறிக்கையானது நிதிக்கூற்றுடன் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். சரி செய்வதற்கு தேவையான நடவடிக்கையினை மேற்கொள்வேன். | சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு அமைவாக செயற்படல் வேண்டும். |

## 2.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) குத்தகைக் காலம் முடிவுற்ற 03 மோட்டார் வாகனங்களின் உரிமையினை கைப்பற்றிக் கொள்வதற்கு 2021 மார்ச் 23 ஆந் திகதி வரையிலும் இயலாது போய் இருந்தது. | ஏற்றுக் கொள்கின்றேன். அந்த 03 வாகனங்களினது உரிமையினை கையேற்பதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, ஏடுகளை இற்றைப் | சொத்துக்களின் உரிமையினை உறுதிப்படுத்திக் கொள்ளப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | படுத்துவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |
| (ஆ) | ஆணைக்குழுவிற்கு சொந்தமான 20 மோட்டார் சைக்கிள்களின் பெறுமதியினை கணக்கிலிடப்பட்டிருக்க வில்லை. | ஏற்றுக் கொள்கின்றேன். மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டதன் பின்னர் அதனை ஏடுகளுக்கு உட்படுத்தப்பட்டு இற்றைப்படுத்துவதற்கான ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நிறுவனத்திற்கு உரிய சொத்துக்களின் கிரயத்தினை உறுதிப்படுத்திக் கொண்டு கணக்கிலிடப்பட வேண்டும். |
| (இ) | 2018 மற்றும் 2019 ஆம் ஆண்டுகளுக்கான பொருட் கணிப்பு அறிக்கையின் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படாது இருந்ததுடன் 2019 பொருட் கணிப்பின் படி பழுதுபட்ட 14 உருக்கு கைப்பிடி கதிரைகள் மற்றும் ஒரு சைக்கிள் குறைவாக இருந்தன. | பொருட் கணிப்பினை மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் முடிக்கப்படாது இருந்தமையினை ஏற்றுக் கொள்கின்றேன். 2020 பொருட் கணிப்பினை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள படியினால் அதன் பின்னர் இது தொடர்பாக செயற்படுவேன். | சுற்றறிக்கையின் படி பொருட் கணிப்பினை மேற்கொண்டு அவற்றின் பரிந்துரைகளை அமுல்படுத்தப்படல் வேண்டும். குறைபாடுகள் தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3. மனிதவள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 சனவரி 04 ஆந் திகதிய இலக்கம் 02/2018 கொண்ட அரச நிர்வாக சுற்றறிக்கையின் 6.1 பந்தியின் பிரகாரம் மனிதவள அபிவிருத்தி திட்டத்தினை தயாரித்து இருக்காததுடன் ஒட்டு மொத்த பணிக் குழாமிற்கான வருடாந்த செயலாற்றுகை ஒப்பந்தத்தினை கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. | 2021 ஆம் ஆண்டிலிருந்து இக்குறைபாடுகளை சீர் செய்து கொள்வதற்கு சகல உத்தியோகத்தர்களும் அறிவுறுத்தப் பட்டிருக்கின்றனர். | சுற்றறிக்கை ஆலோசனைக் கமைய செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2020 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு உள்ளவாறு 95 பதவிகள் வெற்றிடங்களாக இருந்ததுடன், 04 பணிப்பாளர், ஒரு பிரதிப் பணிப்பாளர், 12 சட்ட அதிகாரிகள், 23 மனித உரிமைசார் அதிகாரிகள், மற்றும் 02 பிராந்திய ஒருங்கிணைப்பாளர் அதில் உட்பட்டிருந்தனர். அது போன்றே நிரந்தர அடிப்படையில் அதிகாரிகள ஆட்சேர்க்கப்படாமல் பதில் கடமை அடிப்கடையில் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் அடிப்கடையில் 05 அதிகாரிகள் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். | 2017, 2018 மற்றும் 2020 வருடங்களில் ஆட்சேர்ப்பு மேற்கொள்ளும் பொருட்டு பத்திரிகை விளம்பரங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், 15 வருட அனுபவம் வாய்ந்த விண்ணப்பதாரர்கள் விண்ணப்பிக்காமையினால் வெற்றிடங்களை பூர்த்தி செய்வதற்கு இயலாது போய் இருந்தது. ஆகையினால், ஆணைக்குழுவின் கடமைகளை இடர்பாடின்றி முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு உத்தியோகத்தர்களை நியமனம் செய்வதற்கு நேர்ந்துள்ளது. | அத்தியாவசிய பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிரப்புவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படல் வேண்டும். |